DINAMANI 06.06.2023

# கோவையில் உலக சுற்றுச்சூழல் தினம்

**கோவை, ஜூன் 5:** கோவையில் திங்கள்கிழமை (ஜூன் 5) உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி பல்வேறு விழிப்புணர்வு, மரக்கன்று நடும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

வேளாண்மைப் பல்கலைக்கழகம் சார்பில் நெகிழி பயன்பாட்டை தவிர்ப்போம் என்ற கருப்பொருளை மையப்படுத்தி மனித சங்கிலி நடைபெற்றது. பல்கலைக்கழக பதிவாளர் இரா.தமிழ்வேந்தன், சுற்றுச்சூழல் அறிவியல் துறைத் தலைவர் மகேஸ்வரி ஆகியோர் மனித சங்கிலியை கொடியசைத்து தொடங்கிவைத்தனர்.

இதில் பேராசிரியர்கள் வெங்கடேச பழனிசாமி, கலாராணி, மரகதம், சுரேஷ்குமார், மாணவ-மாணவிகள் பலர் பங்கேற்றனர். இதைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

**ஈஷா யோக மையம்...**

காவேரி கூக்குரல் இயக்கம் சார்பில் நரசீபுரம் பகுதியில் மரக்கன்று நடும் விழா நடைபெற்றது. இதில், பொள்ளாச்சி எம்.பி. கு.சண்முகசுந்தரம், அரோமா நிர்வாக இயக்குநர் பொன்னுசாமி, சுவாமி அஜய் சைதன்யா, சிறுதுளி நிர்வாகி வனிதா மோகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி காவேரி கூக்குரல் இயக்கம் சார்பில் இந்த ஆண்டு 1.10 கோடி மரங்கள் நடப்பட இருப்பதாகவும், இதன் ஒரு பகுதியாக நரசீபுரத்தில் மரக்கன்று நடும் நிகழ்ச்சி நடைபெற்றதாகவும் ஈஷா தெரிவித்துள்ளது.

**வன மரபியல் நிறுவனம்...**

கோவை வனமரபியல், மரப்பெருக்கு நிறுவனத்தில் செயல்பட்டு வரும் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையம் சார்பில் விழிப்புணர்வு பிரசாரம், விழிப்புணர்வு சைக்கிள் பேரணி ஆகியவை நடைபெற்றன.

நிகழ்ச்சியில், பிளாஸ்டிக் மாசுபாட்டுக்கான தீர்வுகள் என்ற நடப்பு ஆண்டுக்கான கருப்பொருள் விளக்க விழிப்புணர்வு சுவரொட்டியை மரப்பெருக்கு நிறுவன இயக்குநர் சி.குன்னிகண்ணன் வெளியிட்டார். முதுநிலை விஞ்ஞானி கண்ணன் சி.எஸ்.வாரியர், மூத்த திட்ட அலுவலர் எஸ்.விக்னேஸ்வரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



கோவை மாவட்டம் நரசீபுரத்தில் காவேரி கூக்குரல் இயக்கம் சார்பில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவில் மரக்கன்று நடுகிறார் பொள்ளாச்சி எம்.பி. கு.சண்முகசுந்தரம்.